**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**

**OS No. 103/2015**

Deposition of witness for வா.சா. 2

Name and Age : **ஜபரூல்லாகான்**

Father's/Husband Name :

Village and Taluk :

Caste and Religion

:

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of (06.11.2025)

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

வழக்கு சொத்தானது இறந்துபோன இரண்டாம் பிரிதிவாதி பார்வதி அம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நான் ஆரம்ப காலத்தில் இருந்து தேங்காய் வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். 2000 வருடம் தேங்காய் வியாபாரத்தை முடித்துக் கொண்டு அருப்புக்கோட்டை சென்று விட்டேன் என்றால் இல்லை. 2006 இல் சென்றேன். குடும்பம் எல்லாம் அருப்புக்கோட்டையில் தான் இருக்கிறது என்றால் சரிதான். இங்கேயும் இருக்கிறோம், அங்கேயும் இருக்கிறோம். ஒன்னாம் பிரதிவாதியின் சகோதரர் துரைராஜ் நாடாரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவரும் தேங்காய் தோப்பை குத்தகைக்கு எடுத்து தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். அவர் குத்தகைக்கு எடுத்த தேங்காயை என்னிடம் ஒப்படைத்து வரவு செலவு செய்து வந்தார் என்றால் இல்லை. அவர் அவ்வாறு வரவு செலவு செய்து வந்து 25.12.1995 நாள் முடிய ரூ.3,00,769/- ரூபாய் அதிக பற்று வைத்திருந்தார் என்றும், அதனால் எனக்கும், துரைராஜ் நாடாருக்கும் பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையம் வரை சென்றது என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் ஒன்றாம் பிரதிவாதி அவரது சகோதரர்களுக்காக என்னிடம் சமாதானம் பேசி அதற்காக சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதில் அதிகப்பற்று ரூபாய் மூன்று லட்சத்திற்கு ஈடாக ஒன்னாம் பிரதிவாதி அடமான பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டேன் என்றால் சரியல்ல. அடமான பத்திரம் என்று சொல்லித்தான் இந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 பவர் பத்திரத்தை 29.12.1995 ஆம் தேதியன்று அடமான பத்திரம் என்று கூறி அதனை படித்து காண்பிக்காமல், அவரது படிப்பு அறிவின்மையை பயன்படுத்தி மோசடியாக வா.சா.ஆ.7 எழுதி வாங்கப்பட்டுவிட்டது என்றால்

சரியல்ல. அந்த மோசடி ஆவணத்தின் அடிப்படையில் தான் வா.சா.ஆ.8 கிரைய ஆவணத்தை எனது மனைவி பெயரில் உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 கிரைய பத்திரத்திற்கு எந்த ஒரு கிரைய பயனீட்டுத் தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் எனது வாக்குமூலம் பத்தி எண்.3 ல் 10.01.1996 தேதியில் பிராது தபசில் சொத்தை கிரையம் கொடுத்துவிட்டு அந்த கிரைய தொகையை பிரதிவாதியிடம் ஒப்படைத்து விட்டு ரசீது அன்றைய தேதியிலேயே வாங்கி உள்ளதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த ரசீதினை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த கிரைய ரசீதை வாங்கிக் கொண்டதாக பத்திரத்தில் பதிவு செய்துள்ளேன். நான் எந்த ஒரு கிரைய பயனீட்டுத்தொகையும் கொடுக்காத காரணத்தினால் தான் எந்த ரசீதும் என்னால் பிரதிவாதியிடம் இருந்து பெறவில்லை என்றால் சரியல்ல.

பிராது தபசில் சொத்தினை மோசடியாக அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தான் வா.சா.ஆ.7 பொது அதிகார ஆவணத்தை உற்பத்தி செய்து, அதன் அடிப்படையில் எனது மனைவி பெயருக்கு வா.சா.ஆ.8 கிரைய பத்திரத்தை மோசடியாக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குரை தபசில் சொத்தில் உள்ள வீடுகளை காட்டக்கூடிய புகைப்படம் தான் என்னிடம் காட்டுவது என்றால் சரிதான். அந்த புகைப்படங்களுடன் கூடிய குறுந்தகடு **<u>பி.வா.சா.ஆ.1</u>** ஆகும். வா.சா.ஆ.7, வா.சா.ஆ.8 ஆகியவை மோசடியான ஆவணங்கள் என்பதால்தான் வழக்குரை தபசில் சொத்தில் அனுபவத்தை எனது மனைவி 1 வது, 2 வது பிரதிவாதிகளிடமிருந்து எடுக்கவில்லை என்றால் சரிதான். அதனால் வா.சா.ஆ.8 கிரைய ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த சொத்தை பொறுத்தவரை 1 வது, 2 வது பிரதிவாதிகள் தான் ஆயுள் வரை உடமையாளர் நிலைமையில் அனுபவித்து வந்தார்கள். அதன் பிறகு அவரது வாரிசுகளான மற்ற பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எனது மனைவிக்கும், 1 வது, 2 வது பிரதிவாதிகளுக்கும் இடையே எந்தவித வாடகை ஒப்பந்தமும் கிடையாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு காலாவதியாகிவிட்டது, அதனால் எனக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct. S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2025.11.06 16:54:05 +0530
District Munsif cum Judicial Magistrate, Shenkottai